## உணவு உண்பதற்கு முன்பு ஓதவேண்டிய துஆ

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள், உங்களில் எவரும் உணவு சாப் பிடத்துவங்கினால் அவர் بِسْمِ اللهِ என்று கூறவேண்டும், அவ்வாறு துவக் கத்தில் சொல்ல மறந்துவிட்டால், இவ்வாறு கூறவேண்டும்:

بِسْمِ اللّٰهِ فِي أَوَّلِهِ وَآخِرِه

பொருள்: *அல்லாஹ்வின் பெயரால் உண்ணத்துவங்குகிறேன், அதன் துவக் கத்திலும் கடைசியிலும் (அபு தாவூத், திர்மிதி)*

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள், எவர் ஒருவருக்கு அல்லாஹ் உண்ண உணவு அளிக்கின்றானோ அவர்கள் இவ்வாறு கூறவேண்டும்

أَللّٰهُمَّ بَارِكْ لَنَا فِيهِ، وَأَطْعِمْنَا خَيْرًا مِنْه

பொருள்: *எங்கள் இறைவனே, இந்த உணவில் எங்களுக்காக அருள் புரி வாயாக, மேலும், இதனைவிடவும் சிறந்த உணவை எங்களுக்கு அளிப்பா யாக.*

எவர் ஒருவருக்கு அல்லாஹ் குடிப்பதற்குப் பால் அளிக்கின்றானோ அவர்கள் இவ்வாறு கூறவேண்டும்

اللّٰهُمَّ بَارِكْ لَنَا فِيهِ، وَزِدْنَا مِنْه

பொருள்: *எங்கள் இறைவனே, இதில் எங்களுக்காக அருள் புரிவாயாக, மேலும், இதிலிருந்து எங்களுக்கு அதிகமாக அளிப்பாயாக. (திர்மிதி).*

* * *

www.uzaifalahi.com